**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை**

**அ.வ.எண்.349/2023**
**[TNDG07 - 001259-2023]**

கனரா வங்கி, கீரனூர் கிளை,
பழனி வட்டம், அதன் மேனேஜர் மூலம். .. வாதி

எதிர்

1.B.லோகநாதன்,
2.T.பாலசுப்பிரமணியன். .. பிரதிவாதிகள்

இந்த வழக்கானது கடந்த 12.12.2023ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் என் முன்னர் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் J.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டிய நிலையில், இன்று வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வந்தபோது, வாதி தரப்பில் தாவாப் பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொண்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

தாவாத் தொகை ரூ.3,74,804/–ம், மேற்படி தொகை அசல் ரூ.3,74,804/க்கு பிராது தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 10.95% பின்வட்டியுடன், இவ்வழக்கின் செலவு தொகையையும் சேர்த்து வாதி வங்கிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்கும்படி தீர்ப்பாக வேண்டி வாதி வங்கியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டிய நிலையில், இன்று வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வந்தபோது, வாதி தரப்பில் தாவாப் பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொண்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு

பதிவு செய்யப்பட்டது. எனவே, இவ்வழக்கானது தாவாப் பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொண்டதாக தள்ளுபடி செய்யப்படுகிறது. நீதிமன்ற முத்திரைக் கட்டணத்தை விதிமுறைகளின்படி வாதிக்கு திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 12.03.2026ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.12 16:39:17 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.